# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2221/57 - 2021 අප්‍රේල් මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.04.01

*2221/57 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 24/ 51* (VII)

**மோட்டார் வாகனச் சட்டம் (203 ஆம் அத்தியாயம்)**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**காமினி லொக்குகே,**
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
2021, மார்ச்சு 30.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மோட்டார் வாகன (சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலத்தை தற்காலிகமாக நீடித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் பாகம் VII இன் கீழ், மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதியன்று தொடங்கி 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியினுள் காலாவதியாவதற்குள்ள அத்தகைய சாரதி அனுமதிப்பத்திரம் ஒவ்வொன்றினதும் செல்லுபடிக் காலப்பகுதியானது, அத்தகைய காலாவதித் திகதியிலிருந்து ஆறு (06) மாதங்களுக்கு இத்தால் நீடிக்கப்படுதல் வேண்டும்.

1A - PG 5237 — 525 (2021/04)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*3. இவ்வொழுங்கு விதிகள், (2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதிய 2211/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியின் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதிய 2180/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, மோட்டார் வாகன (சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலத்தை தற்காலிகமாக நீடித்தல்) ஒழுங்குவிதிகள் மூலம் எந்த சாரதி அனுமதிப்பத்திரமொன்றின் செல்லுபடிக் காலம் ஏலவே நீடிக்கப்பட்டுள்ளதோ அந்த சாரதி அனுமதிப்பத்திரமொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.